## உயிர் வகை

**1.தொல்காப்பியம் குறிப்பு வரைக.**

**தமிழ்மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கணநூல் தொல்காப்பியம். இதனை இயற்றியவர் தொல்காப்பியர். தொல்காப்பியம் பிற்காலத்தில் தோன்றிய பல இலக்கண நூல்களுக்கு முதல் நூலாக அமைந்திருக்கிறது. இது எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையும், 27 இயல்களையும் கொண்டுள்ளது. எழுத்து, சொல் அதிகாரங்களில் மொழி இலக்கணங்களை விளக்குகிறது. பொருளதிகாரத்தில் தமிழரின் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளையும், தமிழ் இலக்கியக் கோட்பாடுகளையும் இந்நூல் விளக்குகிறது.**

**2. தொல்காப்பியர் கூறும் உயிர்வகைப் பாட்டியலை விளக்குக.**

| அறிவுநிலை | அறியும் ஆற்றல் | உரையாசிரியர்களின் எடுத்துக்காட்டு |
|---|---|---|
| ஓரறிவு | உற்றறிதல் (தொடுதல் உணர்வு) | புல், மரம் |
| ஈரறிவு | உற்றறிதல் + சுவைத்தல் | சிப்பி, நத்தை |
| மூவறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் | கரையான், எறும்பு |
| நான்கறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் | நண்டு, தும்பி |
| ஐந்தறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் | பறவை, விலங்கு |
| ஆறறிவு | உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் +பகுத்தறிதல் (மனம்) | மனிதன் |